செய்தி வெளியீடு எண்: 274 நாள்: 20.04.2018

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.4.2018) தலைமைச் செயலகத்தில், பொதுத்துறை சார்பில் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் 25 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு விருந்தினர் இல்லக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், வெளிமாநிலத்திலிருந்தும், மத்திய அரசில் இருந்தும் வரும் அரசு விருந்தினர்களுக்கு தற்போது சென்னை, சேப்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் இல்லத்தில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தால், சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், 40 அறைகள் கொண்ட புதிய அரசு விருந்தினர் இல்லம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 28.8.2014 அன்று சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிதாக கட்டப்படவுள்ள விருந்தினர் மாளிகை கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, அதன் மாதிரி வடிவமைப்பினை பார்வையிட்டார்கள்.

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 60,364 சதுரடி பரப்பளவில் 25 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு விருந்தினர் இல்லக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்த புதிய அரசு விருந்தினர் இல்லத்தின் கீழ்தளம் மற்றும் முதல் தளத்தில், குளிர்சாதன வசதியுடன் தலா 16 அறைகள் வீதம், 32 அறைகள், இரண்டாம் தளத்தில் 8 அறைகள், கீழ்தளத்தில் 2 கூட்ட அரங்குகள், முதல் தளத்தில் 4 ஆலோசனை அரங்குகள் இரண்டாம் தளத்தில் சூரிய மின்சக்தி வசதி கொண்ட சமையல் அறை, உணவு பாதுகாப்பு அறை, 2 உணவு அறைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இக்கட்டடத்தில் மூன்று மின் தூக்கிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, ஓட்டுநர்களுக்கான ஓய்வு

அறைகள், வாகனங்கள் நிறுத்துமிடம், தடையில்லா மின்சார வசதி, அழகிய புல்தரை போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுத்துறை செயலாளர் முனைவர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., பொதுத்துறை (மரபு) துணை செயலாளர் திரு.த. மோகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 20.4.2018